Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

R S Polyclinic

# சென்னை கிளைத் துவக்கத்தின் வாயிலாக தமிழக முதலீட்டாளர்களுக்கான தனது சேவையை யூனியன் மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனம் மேலும் வலுப்படுத்துகிறது

சென்னை 24, அக்டோபர் 2026: யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா மற்றும் தை-இச்சி லைஃப் குரூப் ஆகியவற்றின் கூட்டு ஆதரவுடன் செயல்படும் யூனியன் மியூச்சுவல் ஃபண்ட் (யூனியன் எம்எஃப்), சென்னையில் தனது புதிய கிளை அலுவல கத்தைத் தொடங்கி யுள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு முழுவதி லும் உள்ள முதலீட் டாளர்கள் மற்றும் விநியோகக் கூட்டா ளர்களுக்கான தனது அர்ப்பணிப்பை அது மேலும் வலுப்படுத்தி யுள்ளது.

இந்த பிராந் தியத் தில் உள்ள முதலீட் டாளர்கள் மற்றும் விநியோகஸ்தர் களுக்கு ஒரு முக்கியத் தொடர்பு மையமாக இக்கிளை விளங்கு வதோடு, நுகர்வோர் ஈடுபாடு, அணுகல் தன்மை மற்றும் « சவை வழங்கலை மேம்படுத்துவதற் கான யூனியன் மியூச்சுவல் ஃபண்டின் முயற்சிகளுக்குப் பக்க பலமாக இருக்கும்.

இந்த வளர்ச்சி குறித்து, யூனியன் அசெட் மேனேஜ் மென்ட் கம்பெனி பிரை வேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி திரு. ராஜ்கமல் திவாரி கூறுகையில்: "வலுவான நிதி ஒழுக்கக் ணுாலாச் சாரம் மற்றும் தொடர்ந்து அதிகரித்து வரும் முதலீட்டாளர் களின் எண்ணிக்கை யோடு, பரஸ்பர நிதி (மியூச்சுவல் ஃபண்ட்) துறைக்கு தமிழ்நாடு நீண்ட காலமாக ஒரு முக்கியமான சந்தை யாக விளங்கி வருகிறது. இந்தச் சென்னையில் தொடங்கப்பட்டுள்ள கிளை அலுவலகம், இப் பிராந்தியத்தில் எங்களது இருப்பை வலுப்படுத்துவதற்கும், முதலீட்டாளர்கள் மற்றும் விநியோகக் கூட்டாளர்களுடன் ஆழமான உறவுகளை உருவாக்குவதற்கும் எங்களின் தொடர்ச்சி யான அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது" என்றார்.

"அதிகப்படியான முதலீட்டாளர்கள் தங்களின் நீண்ட கால நிதித் திட்டமிடலின் ஒரு பகுதியாக பரஸ்பர நிதிகளை (மியூச்சுவல் ஃபண்டுகளை) ஏற்றுக் கொண்டு வரும் நிலை யில், அவற்றுக்கான அணுகல்தன்மையும் நுகர்வோர் ஈடுபாடும் முன்னெப்போதையும் விட மிகவும் முக்கிய மானதாக மாறுகின்றன. இப்பிராந்தியம் முழுவதிலும் உள்ள முதலீட்டாளர்களுக்கு ஆதரவளிப்பதையும், முறையான முதலீட்டு அணுகுமுறையின் மூலம் அவர்கள் தங்க ளின் நிதி இலக்குகளை அடைய உதவுவதையும் நாங்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறோம்."

செப்டம்பர் 2026 நிலவரப்படி, தமிழ் நாட்டின் பரஸ்பர நிதி (மியூச்சுவல் ஃபண்ட்) துறையின் கீழ் நிர்வகிக் கப்படும் மொத்த சொத்து மதிப்பு தோராயமாக ரூ.4.07 லட்சம் கோடியாக உள்ளது. இதன் மூலம் இத்துறைக்கு தமிழ்நாடு தொடர்ந்து ஒரு முக்கிய சந்தையாகத் திகழ்கிறது. செப்டம்பர் 2026 நிலவரப்படி, தோராய மாக ரூ.2.95 லட்சம் கோடி சொத்து மதிப் புடன் சென்னை இந்த வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்களிப்பாள ராகத் தொடர்கிறது. இது மாநிலத்தின் பரஸ்பர நிதிச் சூழலில் இந்த நகரத்தின் முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கிறது.

---